10வது ஆண்டில்

# உலக தமிழோசை
ULAKA THAMILOSZAI

# விளம்பரம்
VLAMBARAM™

(416) 282-8059
(416) 282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 11 APRIL 15, 2001 பாலம் 08

* விண்வெளி ஆராய்ச்சியில் ஒருபடிக்கல் 'MIR' (பக். 2)
* "தமிழ் வருட வாழ்த்து" ஆங்கிலத்தில் கூறும் ராசம்மாக்கா (பக்.12)
* செவ்வாயில் பிறந்து பூமியில் வாழும் மனித இனம்? (பக். 9)
* இந்தியாவின் புதிய கிரிக்கெட் விளையாட்டு வீரர் (பக்.06)
* தமிழ் படங்களிற்கான தேசிய விருதுகள் (பக். 7)
* வாகனத்தை நிறுத்தும் - சிவப்பு நிறச் சைகை (பக். 6)
* கணணியில் பாவிக்கும் 'CD' என்றால் என்ன? (பக். 8)
* வீட்டின் விலை இறங்கத் தொடங்குகின்றதா? (பக்.17)
* தாலியைக் கழுத்தில் தொங்கவிடுவதன் காரணம் (பக். 5)

RE/MAX Crossroads Realty Inc., REALTOR
Independently Owned and Operated

வீடு வாங்க, விற்க
பூரண ஆலோசனை பெற

Raja M. Mahendran, P. Eng.
Sales Representative
MEMBER OF RE/MAX HALL OF FAME
MEMBER OF RE/MAX PLATINUM CLUB
(416) 491-4002
Pager: (416) 589-4270

இழந்த தலைமுடியை மீண்டும் பெற
வாருங்கள் சபோனாவிற்கு!

SABONA & Gift
☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
2602 B Eglinton Ave. E., Scarborough

## உலக நாடுகள் வரிசையில்
### பபுயா நியூ கின்னி (Papu New Guinea)

தென் பசுபிக் சமுத்திரத்தில்

அவுஸ்திரேலியாவுக்கு வடக்கு பக்கமாக மூன்று பக்கம் கடலால் சூழப்பட்டுள்ளது. ஒரு பெரிய நிலப்பரப்பும், மற்றும் அதனுடன் அண்மித்த தீவுகளும் சேர்ந்து இப் பெயரினுள் அடங்கும். தங்கம், வெள்ளி, ஹொப்பர், காட்டு மரங்கள், கோப்பி போன்ற பல இயற்கை வளங்கள் நிறைந்த நாடாக இருந்த போதிலும், பெரும் நிலப் பாறைகள், மலைகள், மலைக் காடுகள் யாவும் இந் நாட்டின் வளங்களை அனுபவிப்பதற்குரிய தடைகளாகும்.

<u>மொத்த நிலப்பரப்பு:</u> 180,508 ச.மைல்

<u>மக்கள் சனத்தொகை</u> 4.5 மில்லியன்

<u>தலைநகரம்:</u> போற் மோர்ஸ்வி **(Port Moresby)**

**மொழி:** 750 Indigenous Languages Plus Pidgina Motu

**மதம்:** புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் - 44% (Predominantly Christian)
கத்தோலிக்கர்கள் 22%, ஆதிவாசிகளின் பாரம்பரிய நம்பிக்கையில் வாழ்வோர் 34%

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

"வேருக்குள் பெய்யும் மழை", 8ஆவது அரங்காடலில மேடையேறிய ஒரு நாடகம் . இது ஒரு கருத்தற்ற சொற்றொடர் போலத் தான் மேலெழுந்தவாரியாக விளங்குகின்றது. இதனைப் புரிந்துகொள்ள எத்தனித்தால் புரிந்தவர்களிற்கு இக் கருத்த்தின் ஆழம புரியும். இயற்கையில் வேருக்குள் மழை பெய்வது இயலாத செயல், இருந்தும் அதன் பாதிப்புப் பெரிதாகும். மனிதன் சுற்றாடலால் ஏற்படும் மாற்றங்களை, தாக்கங்களைப் புரிந்து கொள்ளாமல அதனுடன் ஒன்றிப் போகின்றான் அல்லது அந்த இயல்பு மாற்றத்துடன் சேர்ந்து கொள்கின்றான் என்பது ஏற்றுக கொள்ளாத உண்மை ஆகும். ஒரு பிழையான தகவலைத் தொடர்ந்து சரியெனச் சொல்லிக் கொண்டு வரும் போது, கால நீரோட்டத்தில் அது சரி எனப்படும் அல்லது சரியென்பதற்கு காரணங்கள் கண்டு பிடிக்க முயற்சிப்போம். எடுத்துக்காட்டாக "வணக்கம" என்ற சொல், இங்குள்ள 24 மணிநேர '**CTBC**' என்ற வானொலியே தமிழர் மத்தியில் பரவலாகப் பாவிக்கக் கூடிய தன்மையை உருவாக்கியது என்பது ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மை ஆகும். இவ்வாறு பல உதாரணங்களைச் சொல்லலாம். இதுவே வேருக்குள் பெய்யும் மழை என்பது நெற்றிக் கண்ணனின் அபிப்பிராயம். அபிப்பிராயங்கள் மாறலாம் வித்தியாசப்படலாம் இதன் படைப்பாளி வேறு கருத்தைச் சொல்வதாகக் கூறினால் கூட, இதனையும் ஒரு கருத்தாகக் கொள்ளலாம் என்பது எனது கருத்து. எனவே வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்ற ஊடகங்கள் மக்களிற்குத் தேவையான, உண்மையான மழையைக கொடுப்பதே புதிய சிறந்த தமிழ்ச் சமுதாயத்தைக் கனேடிய மண்ணில் உருவாக்குவதற்குப் பக்கபலமாக இருக்கும்.

நல்லதையே சிந்திப்போம்! நல்லதையே செய்வோம! -நெற்றிக்கண்ணன்

☞ உறுதியான பானையில் ஒரு ஓட்டை இருந்தாலும் அது குப்பை மேட்டுக்குப் போய்விடும். மனிதனிடத்து ஒரு குற்றம் இருந்தாலும் அது அவனை அழித்து விடும்.

☞ கண்கண்ட தெய்வங்களாக உயிர்களை வணங்கு. உயிர்களுக்கு நிகரான தெய்வத்தை இந்நிலவுலகில் காண முடியாது. அவர்களிடத்து நீ வைக்கும் நல்லிணக்கமே வணக்கமெனப்படுகிறது.


SINGAPORE CELLUAR
$29.00 Mon. - Fr. 6:00 p.m to 8a.m FREE Sat. & Sun. FREE & Much More
$49.00 3 Months Service Numeric + Voice + Activation FREE PAGER
$55.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 400min. இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 20 சதம் மட்டுமே
CANTEL
Bell Mobility
Mobile Message, Call Waiting, Call Display per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378
HOTLINE: (416) 980-1234


சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480
திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221

Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)

☞ Auto
☞ Home
☞ R.R.S.P
☞ Life
☞ Disability
☞ Mutual Fund
☞ Group Insurance
☞ Child Education
☞ Travel ☞ Business
London Life
LIBERTY MUTUAL.
✆ 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com




# அறிவும் ஆக்கமும் (78)

-விஜே குலத்துங்கம்

ஒரு பிரமுகர் இறந்த பின்னர் அவரைப் பற்றியெல்லாம் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் போன்றவை புகழ்ந்து கூறும். அந்த வகையில் நாமும் மறைந்த ஒருவரையல்ல, ஒன்றைப் பற்றிப் பார்ப்போம். 15 வருட காலம் வாழ்ந்து சேவையாற்றி கடந்த மாதம் 23 ஆம் திகதி தன்னை அழித்துக் கொண்ட விண்வெளி ஆராய்ச்சி நிலையமான "MIR" **Space Station** ஐப் பற்றிப் பார்ப்போம். 15 வருட காலத்தில் 12 வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த 100 க்கு மேற்பட்ட விண்வெளி வீரர்கள் சென்று வாழ்ந்துள்ளார்கள்.

அமெரிக்காவிற்கும் இரஷ்யாவிற்கும் பனிப்போர் நிகழ்ந்த காலகட்டத்தில் விண்வெளிக்கு இரஷ்யாவினால் அனுப்பப்பட்டு, பின்னர் இறுதிக் காலகட்டத்தில் அமெரிக்கர் இரஷ்யர்கள் மாத்திரமல்ல பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்களும் ஒன்று கூடிய இடமாக அந்த "**MIR**" சரித்திர முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்த விண்வெளிக் கூடத்தின் 20 தொன் நிறையுடைய முதல் பிரதான பகுதி 1986 ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. இதன் அமைப்பு வெவ்வேறு காலகட்டத்தில், வெவ்வேறு இணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள ஏற்றவாறு அமைக்கப்பட்டிருந்தது. இந்த விண்வெளிக் கூடத்தின் முதலில் சென்ற பெருமை **Leonid Kizim, vladimir sdovyon** ஆகியோரைச் சாரும்.




இந்த **MIR** விண்வெளிக் கூடத்தின் இரண்டாவது பாகம் 1987 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி அனுப்பப்பட்டு, தாய்க் கூடத்துடன் இணைந்து கொண்டது. இந்த இரண்டாவது பாகம் அல்லது **Module** ஆனது **Kvant** 1 என்று அழைக்கப்பட்டது. இது விண்வெளியின் பௌதிகவியலைப் படிப்பதற்காக அமைக்கப்பட்டது. உயிரியல் ஆராய்ச்சிக்கான இரண்டாவது பாகமாக **Kvant** 2 ஆனது 1989 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அனுப்பப்பட்டது. இது சூரிய ஒளியைப் பெற்று சக்தியை உருவாக்கும் அமைப்புக்களையும் அத்துடன் நீரை **recycle** பண்ணவும், ஒட்சிசனை உற்பத்தி செய்யும் அமைப்புக்களைக் கொண்டிருந்தன. இதே வருடம் 4 மாதங்களுக்கு இந்த விண்வெளிக் கூடத்தில் ஒருவருமே இருக்கவில்லை. ஆனால் இந்தக் காலம் தவிர்ந்த 15 வருடத்தின் மற்றைய கால கட்டங்களில் அங்கு விண்வெளி வீரர்கள் தொடர்ந்து மாறி மாறி இருந்து வந்தனர்.

1990 ஆம் ஆண்டு முதன் முதலாக விண்வெளி வீரர் அல்லாத சாதாரண நிருபர் ஒருவர் இந்த விண்வெளிக் கூடத்திற்கு சென்றார். இவர் ஜப்பானை நேர்ந்த **Toyohiro Akiyama** ஆவார். இவர் **MIR** விண்வெளிக் கூடத்தில் இருந்து ஜப்பானிய தொலைக்காட்சிச் சேவைக்கு நிகழ்ச்சிகளைச் செய்திருந்தார். இதற்காக **Tokyo** விலுள்ள தொலைக்காட்சிச் சேவை 20 மில்லியன் டொலர்களைக் கொடுத்தது. இதே வருடத்தில் மூன்றாவது பகுதியான **Kristall** என்ற பகுதி இணைக்கப்பட்டது. இந்தப் பகுதி இணைக்கப்பட்டிருந்ததால் வேறு விண்வெளிக் கப்பல்கள் வந்து தரித்து நின்று பின்னர் புறப்பட்டு செல்லக் கூடியதாக இருந்தது.

1991 ஆம் ஆண்டு பிரித்தானியாவைச் சேர்ந்த பெண் விண்வெளி வீரரான **Helen Sharman** அங்கு சென்று ஒரு கிழமையைக் கழித்தார். 1991 ஆம் ஆண்டு திரும்பிய **Sergei Krikalev** என்பவர் போகும் போது அவரின் நாடு சோவியத் யூனியனாக இருந்தது. இவர் திரும்பி வந்தபோது நாடு பிரிந்து இரஷ்யாவிற்குத் தான் திரும்பி வந்தார். 1992 ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட ஜேர்மனியில் இருந்து ஒருவரும், பிரான்சில் இருந்து ஒருவரும் விண்வெளிக் கூடத்திற்கு சென்றனர். 1992 ஆம் ஆண்டு இரசாயன பளிங்குகள் விண்வெளியில் வளருமா என பரிசோதிக்கப்பட்டன.

1994 ஆம் ஆண்டு இரஷ்யாவினால் அனுப்பப்பட்ட **Soyuz TM**-17 என்ற விண்கலம் **Mir** விண்வெளிக் கூடத்தின் **Kristall** பகுதியுடன் மோதியது. இதேயாண்டு அமெரிக்காவும், இரஷ்யாவுடன் இணைந்து கூட்டு முயற்சிகளிலும் ஆராய்ச்சிகளிலும் ஈடுபடுவதென்று தீர்மானித்தது. அத்துடன் சர்வதேச விண்வெளிக் கூடத்தின் **(International Space Station - ISS)** தொழில்நுட்ப தேவைகளுக்கு **MIR** ஐப் பயன்படுத்துவதென தீர்மானித்தார்கள். ஒக்டோபர் மாதத்தில் **Soyuz Tm -20** என்ற விண்வெளிக் கலத்தின் மூலம் **MIR** க்கு சென்ற **Elena Kondakova** பெண்மணி ஒருவருக்குரிய **Record** ஆக 169 நாட்கள் விண்வெளியில் கழித்தார். ஜுலை 1995 ஆம் ஆண்டு முதன் முறையாக அமெரிக்க விண்கலம் **MIR** க்கு சென்று இணைந்து தரித்து நின்றது.


1995 ஆம் ஆண்டு **MIR** இல் இருந்து பூமிக்கு திரும்பிய **Valery Polyakov** என்பவர் ஒரு புதிய உலக சாதனையாக 438 நாட்கள் அல்லது **1 1/4** வருடங்கள் விண்வெளியில் தொடர்ந்து வாழ்ந்தார் என்ற சாதனையை நிலை நாட்டினார். இந்தக் காலம் ஏறக்குறைய செவ்வாய் கிரகத்திற்கு செல்லும் ஒரு வழிக் காலமாக இருக்கும். 1996 ஆம் ஆண்டு இதன் இறுதி பாகமான **Priroda Module** அனுப்பி வைக்கப்பட்டது. இதே ஆண்டு இரண்டு அமெரிக்க விண்வெளிக் கலங்களும் அங்கு சென்று தரித்து நின்று திரும்பி வந்தது.

(தொடர்ச்சி 3 ஆம் பக்கம்)

13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

யோகாஸ் புதிய இடத்தில்

☎: (416) 267-0408



குறுக்கு எழுத்துப் போட்டி இல. 117

இடமிருந்து - வலம்

1. முள் நிறைய உள்ள மரத்தின் இனிமையான பழம் இது
4. இது ஆறுவகை
5. மகன்
6. எதிர்ப்புக்குத் தாராளமாக இரு(வல-இட
7. தமிழில் உள்ள 12 பிரிவு சைவ துதிப் பாடல்கள்
9. கட்டுத்தோ் கட்ட இது உதவும்
10. திருமாலின் வதிவிடம்

மேலிருந்து கீழ்

1. அரசியல் சாணாக்கியம்
2. கடல்
3. ஜானகி (கீழ் - மேல்)
6. வன்னியில் இருந்து வெளிவரும் பத்திரிகை (கீழ்-மேல்)
8. அன்னை வேளாங்கன்னியின் வதிவிடம் (கீழ் - மேல்)
9. மக்களின் தொகுதி (கீழ் - மேல்)
11. மழை வெய்யில் இரண்டில் இருந்தும் இது மக்களைப் பாதுகாக்கும் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் APRIL 27, 2001க்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.



116இல் வெற்றி பெற்றோர்
1) V. யோகம், Donmills. Ont.
2) K. Muhilan, Scarborough, Ont.

* ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

733 kennedy Road
[Ken-Mark Plaza]

நியூ மிலேனியத்தில்
ஸ்காபரோவில் 10 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

Also Air Conditioning Service & Repair

NTE AUTO INC.
New Trade Engineering

என். ரி. இ. ஓட்டோ இங்க்

Contact: Sivabalan சிவபாலன்

Tel: (416) 750 - 1573

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple



## DAYCARE

- 3 மாதம் - 6 வயதுச் சிறுவர்களுக்குச் சிறந்த பராமரிப்பு.
- காலை 7.00 மணி - மாலை 6.00 மணிவரை.
- இருநேர உணவும், பிற்பகல் சிற்றுண்டியும் வழங்கப்படும்.
- வயதுக்கேற்ப கணிதம், தமிழ், ஆங்கிலம், கொம்பியூட்டர் ஆகியன கற்பிக்கப்படும்
- விளையாடத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளன.





கட்டணம்:-
Week - $ 40.00
Day - $ 10.00
1 Hr - $ 1.50

தொடர்புகளுக்கு: 416-335-5578
McCowan / Sheppard
#704, 360 Pitfield Rd.
Scarborough, ON.





## திருமண சேவை



உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன் மணமகளைத் தெரிவுசெய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள்

☎:416-261-6219
Email:ratnam51@hotmail.com



தமிழர்கள் மத்தியில் பலவருட அனுபவம் மிக்கவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியதோர் வெதுப்பகம்

## BREAD MASTER BAKERY

## பிறட் மாஸ்ரர் பேக்கரி

மொத்த ஓடர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்



றோஸ் பாண் கிடைக்கும்

பாண், பனிஸ், றோல்ஸ் அனைத்தும் சுடச்சுட எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

வாரத்தில் 7 நாட்களும்

3 for 0.99¢

**31 TAPSCOTT ROAD, UNIT #B3**
LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH
**TEL: (416) 299-5083**


"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் – 361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது wijey@hotmail.com என்ற முகவரிக்கு e-mail அனுப்பவும்.

## அறிவும் ஆக்கமும்

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

இதேயாண்டு **NASA** விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த **Shannon Lucrd** தனது 179 நாட்கள் விண்வெளி வாழ்க்கையை முடித்துக் கொண்டு பூமிக்கு திரும்பினார். ஒரு அமெரிக்கருக்கு இதுவே ஆகக் கூடிய விண்வெளி வாழ்க்கைக் காலமாகும். இந்த கால கட்டத்தில் இந்த பெண் ஆராய்ச்சியாளர் புவியீர்ப்பு விசைகள், விண்வெளி விஞ்ஞானம் போன்றவற்றில் ஆராய்ச்சிகளையும், பூமியை நோக்கிய அவதானிப்புக்களையும் செய்து முடித்தார்.

1997 ஆம் ஆண்டுதான் **MIR** இல் கூடுதலான விபத்துக்கள் ஏற்பட்டன. ஜனவரியில் பிரதான பகுதியில் நெருப்பு பிடித்தது. இதைக் கைவிட்டு வெளியேறுவது என்று விண்வெளி வீரர்கள் தீர்மானத்த நேரத்திற்கு சற்று முன்னதாக ஒருவாறு தீயை அணைத்துவிட்டார்கள். ஜூன் மாதத்தில் சாமான்கள் ஏற்றிச் சென்ற விண்கலமானது வழி தவறி **Mir** விண்வெளிக் கூடத்துடன் மோதியது. ஒரு சூரிய வெளிச்சத் தகடு - **solar Panel** சேதமடைந்ததுடன், **Spektr** என்ற **Module** இலும் துவாரம் ஏற்பட்டது. இதனால் விண்வெளிக் கூடத்தில் இருந்து காற்று கசியத் தொடங்கி அமுக்கம் குறையத் தொடங்கியது. இதனால் **cable** களை அறுத்து **Spektr** பகுதியை வேறாக்கினார்கள். இதனைத் தொடர்ந்து மின்கணணி தொகுதியிலும் பிழைகள் ஏற்படத் தொடங்கியது. **July** மாதத்தில் ஒரு விண்வெளி வீரர் தவறுதலாக ஒரு **Cable** ஐ வெட்டியதால், விண்வெளிக் கூடத்தில் மின்சாரம் நின்று போனது. ஆகஸ்ட் மாதத்தில் ஒட்சிசனை உருவாக்கும் **generator** கள் இரண்டு பழுதாகின. தொடர்ந்து 1998 ஆம் ஆண்டும் திரும்பவும் சூரிய ஒளிச் சக்தியைப் பெறும் கருவிகள் சரிவர தொழிற்படாததால், உள்ளே 32°**c** வரையிலும் அதிகரித்தது. பின்னர் ஒரு குளிராக்கும் கருவியை பொருத்தி 28°**c** வரையிலம் குறைக்க கூடியதாயிருந்தது.

இதே வேளையில் பல நாட்டுக் கூட்டுத் தயாரிப்பான **International Space Station - ISS** இன் முதல் பகுதியான **Zarya** வை இரஷ்யா அனுப்பி வைத்தது. இரண்டையும் பராமரிப்பது கடினம் என்பதால் **MIR** ஐ கைவிடத் தீர்மானித்தார்கள். 1999 ஆம் ஆண்டு 27 வது விண்வெளிப் பயணத்துடன் ஆகஸ்ட் மாதத்தில் **MIR** ஐ கைவிடுவதென தீர்மானித்தார்கள். ஆயினம் 2000 ஆம் ஆண்டில் அமெரிக்க வர்த்தகரான **Walt Anderson** என்பவர் **MIR** ஐ பிழைக்க வைத்து தொடருவதற்கு 20 மில்லியன் டொலர்களை தர முன் வந்தார். இதனால் **April** மாதத்தில் **MIRCORP** என்ற இவரால் தொடக்கி வைத்த நிறுவனத்தின் செலவில் இரண்டு விண்வெளி வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். ஆனாலும் இம் முயற்சி ஜூன் மாதத்தில் முடிவடைந்தது. இதே நேரத்தில் கலிபோர்னியாவைச் சேர்ந்த வர்த்தகரான **Dennis T.to** தன்னை **MIR** க்கு சுற்றுலாவாக அழைத்துச் செல்ல 20 மில்லியன் டொலர் தருவதற்கு ஆயத்தமாக இருந்தார் என்றாலும், இவர் முயற்சி கைகூடவில்லை. கடைசியாக **MIR** க்கு சென்று வந்தவர்கள் இரஷ்ய விண்வெளி வீரர்களாக **Alexander Kaleri** உம் **Sergei Zaletin** உம் ஆவர். 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இரஷ்ய விஞ்ஞானிகள் **MIR** விண்வெளிக் கூடத்தை 2001 ஆம் ஆண்டு பெப்ரவரியில் பசுபிக் கடலில் விழுத்துவதென்று தீர்மானித்தார்கள்.

2001 ஆம் ஆண்டு தனது 15 வது ஆண்டை **MIR** கொண்டாடியது, அனுப்பப்பட்டபோது 5 ஆண்டுகளுக்குத்தான் விண்வெளியின் இருக்கும் என தீர்மானிக்கப்பட்ட போதும், 10 வருடங்கள் கூடுதலாக விண்வெளியில் கழித்தது. கடைசியாக இவ் வருடம் மார்ச் மாதம் 23 ஆம் திகதி, அதனுள் இருந்த இயந்திரங்கள் இயக்கப்பட்டு பூமியை நோக்கி செலுத்தப்பட்டு பூமியின் வளிமண்டலத்துள் பிரவேசித்தது. பிரவேசித்த போது இதன் 135 தொன் நிறையுடைய விண்வெளிக் கூடத்தின் பகுதிகள் எரிந்து விட்டன. **GMT** நேரப்படி 0507 க்கு ஆரம்பிக்கப்பட்ட பயணம் 0530 **GMT** நேரத்தில் 9 தொடக்கம் 12 உடைந்த பகுதிகள் ஜப்பானுக்கு மேலாகச் சென்றன. **Fiji, Sumatra** தீவுகளில் இருந்து இவை வானத்தில் நெருப்புப் பாளங்களாகச் சென்றதை மக்கள் பார்க்கக் கூடியதாக இருந்தது. சுமார் 25 தொன்கள் நிறையுள்ள துண்டுகள் சரியாக 0600 **GMT** நேரத்தில் அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரையிலிருந்து 5,800 கிலோமீற்றர் தூரத்தில் தென் பசுபிக் கடலில் விழுந்து தனது சரித்திரத்தை **MIR** முடித்துக் கொண்டது.

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

- சிவ பஞ்சலிங்கம்



பகுதி(49)

ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்தி வீதி ஒழுங்குகளை மீறித் தண்டனை ரிக்கற் பெறுவோர் தம்முடைய குற்றச் சாட்டினை நீதிமன்றத்ததிற்கு எடுத்துச் சென்று இக் குற்றச் சாட்டிலிருந்து தப்பிக் கொள்வது தொடக்கம் அப்பீல் செய்வது வரை பார்த்ததுடன், வீதி ஒழுங்குச் சட்டங்களை மீறும் குற்றச் சாட்டுகளில் பொதுவான சில குற்றச் சாட்டுகள் பற்றி கடந்த அத்தியாயங்களில் ஒவ்வொன்றாக பார்த்தோம்.

இம் முறை வீதி ஒழுங்குச் சட்டங்களை மீறும் அடுதத ஒரு குறிப்பிடப்பட்ட குற்றச் சாட்டுகளுக்குச் செல்வோம்.

## சிவப்பு நிற சைகை (Red Light), நிறுத்துகை சைகை (Stop Sign) மற்றைய ஏனைய சைகைகள் (Other Signs)

சிவப்பு நிறசைகை தொடர்பாக விதி ஒழுங்குச் சட்டத்தின் 144(18) ஆம் பிரிவு பின்வருமாறு ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**'Every driver approaching a traffic control signal showing a circular red indication and facing the indication shall stop his or her vehicle and shall not proceed until a green indication is shown**

இப்போது ரொரன்ரோவில் நகரசபையினர் சில குறிப்பிடப்பட்ட முக்கிய சந்திப்புகளில் நவீன கமராக்களைப் பொருத்தி வைத்திருப்பதன் மூலம் இச்சிவப்பு நிறச் சைகைகளில் மீறி வாகனத்தினை செலத்துவோர் தாமாகவே சட்டத்தின் பிடியினுள் பிடிபட்டு கொள்கின்றனர். இவற்றிக்குரிய தண்டனைப் பண ரிக்கற் தபாலில் வீட்டு விலாசத்திற்கு வாகன உரிமையாளருக்கு அனுப்பபாடும்.

நீதிமன்ற விசாரணைகளின் போது குற்றம் சாட்டப்பட்டவர் சந்தியினுள் பிரவேசித்த போது சைகை சிவப்பு நிறமாக இருந்தது என்பது அரச வழக்கு தொடுநரால் முன் வைக்கப்பட்டது. இதனை பிடித்த பொலீஸ் உத்தியோகத்தரின் சாட்சியத்துடன் நிரூபிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஆனால் அடுத்த கேள்வியாக எந்த சரியான சந்தியுள்ள இடத்தில் வாகனம் சிவப்பு நிற சைகையில் பிரவேசித்தது என்பது கேட்கப்பட வேண்டிய ஒரு கேள்வியாகும்.

**At what point does a vehicle actually entre the intersection?**

சிவப்பு நிறச் சைகை என்பது தீடீர் என மாற முன்பு மஞ்சள் நிற சைகை என்பது எச்சரிக்கை செய்து நிறுத்துமாறு கோருகின்றது. இம் மஞ்சள் நிற சைகையினை சற்றுத் தூரத்தில் வரும் போதே தீர்மானித்து முடிவு எடுத்து விடமுடியும். அதாவது பிரவேசிக்கும் போது உள்ள கணப் பொழுதில் சிவப்பு நிற சைகையாக இருக்காமல் இருந்தால் மட்டும் தப்பிக்கக் கூடியதாக இருக்கும். **('Fight the ticket in Ontario"** என்னும் நூலின் ஆசிரியர் திரு. அலன் ஈ. ஸ்கொற் என்பவரின் கருத்துப்படியும் இக் குற்றச் சாட்டில் இருந்து வாதாடி தப்பித்துக் கொள்வது என்பது மிகவும் கடினமான விடயம் என குறிப்பிடுகின்றார்)

## Disobey stop sign-fail to stop (நிறுத்துகை சைகையில் நிறுத்தத் தவறுவது)

வீதி ஒழுங்குச் சட்டத்தின் 136(1) பிரிவு நிறுத்துகை சைகையில் நிறுத்த வேண்டிய சட்டப் பிரிவு பற்றி ஆங்கிலத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**"Every driver - approaching a stop signal at an intersection, shall stop his or her vehicle at a**

**a) Marked stop line or**
**b) If none, then immediately before entering the nearest cross walk or**
**c) If none then immediately before entering the intersection.**

அதாவது முன் தடித்த வெள்ளைக் கோட்டுடன் அது இல்லாவிட்டால் நடைபாதை முன் விளிம்புடன், இவை இரண்டும் இல்லாவிட்டால் வீதியோர விளிம்புடன் நிறுத்தப்படல் வேண்டும் என்பதுவே இச் சட்டப் பிரிவு வலியுறுத்துகின்றது. இதனை மீறுவோர் அதற்குரிய குற்றச் சாட்டுக்கு உரியோர் ஆகின்றனர்.

இக் குற்றச் சாட்டுகளில் இருந்து தம்மை தப்பித்துக் கொள்ள விரும்பும் ஒருவர் குறிப்பிட்ட சம்பவம் நடந்த நேரம் சிவப்பு நிற சைகை பழுதடைந்து இருந்தமை என்பதுவோ அல்லது நிறுத்துகை சைகை தெளிவாக இருக்கவில்லை என்பது போன்ற ஆதாரங்களுடன் நிரூபித்தாலே தவிர வேறு வழிகளில் நிரபராதி என தப்பித்துக் கொள்ள இங்கு சந்தர்ப்பம் இல்லை.

## இக்குற்றச் சாட்டுக்குரிய தண்டனைகள்

தண்டனைப் பணம் $60 - $500 டொலர் வரை அறவிடப்படும். புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் என்பது இழக்கப்பட்டு இரு வருடங்களுக்கு பதிவுகளில் இருக்கும்.

* ஏதாவது ஒரு சைகையின் கட்டுப்பாட்டினை மீறி சந்தியினூடாக செலுத்தினால் அல்லது
* வலது பக்கமோ அல்லது இடது பக்கமோ திருப்பக் கூடாது என்ற இடத்தில் திருப்பினால் அல்லது
* ஒரு சைகைக்கு கட்டுப்பட்டு போகாவிட்டால் இரு புள்ளி மதிப்பீட்டு இழப்புகளை இழக்க வேண்டி வரும். இதே போல

* நிறுத்துகை சைகைக்கு கட்டுப்படாவிட்டால் அல்லது
* சிவப்பு நிறசைகைக்கு கட்டுப்படாவிட்டால் அல்லது
* புகையிரத கடவை சந்திப்புக்குக் கட்டுப்படாவிட்டால் அல்லது
* முன்னுரிமை சைகைக்கு **(Yield sign)** கட்டுப்படாவிட்டால் மூன்று புள்ளி மதிப்பீட்டு இழப்புகளை இழக்க வேண்டி வரும்.

தொடரும்....

மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம் - (416) 321-0999
**(Professional Licensed Instructor In Car & Class Room)**

கிராமத்து விருந்து



RESTAURANT, CATERING, TAKE OUT L.L.B.O.
603 Kennedy Road,
Scarborough, Ont.
☎: (416) 266-4240

TAKEOUT OR DINE IN

தலை வாழையிலை விருந்து
ஆடு, கோழி, மீன், மரக்கறிப்
பார்சல் அல்லது அமர்ந்து
சாப்பிட (Dine In)

$4.99 + Tax மட்டும்



அப்பம் சோடி .99



$4.99 +Tax மட்டும்

குளல் பிட்டு:
ஆடு/கோழிக்கறி, சம்பல், பருப்பு

மசால தோசை அல்லது யாழ்.தோசை.... $3.99
சிக்கன் நூடில்ஸ் (Spicy).................. $4.99
பெரியகால் நண்டுக்கறி விருந்து........ $9.99 +Tax
(மட்டக்களப்பில் இருந்து தருவிக்கப்பட்டது.)
குடும்பத்துடன் வரவும்

TAKE-OUT ONLY NO TAX
விபரம் அறிய - 416 266 - 4240

இந்தியா செல்கிறீர்களா? இந்தியாவில்
திருமண ஒழுங்குகள் மேற்கொள்ள
அழைக்கவும் ஜோசப் (416) 266-4240

ஞானம்ஸ் ஸ்ரூடியோ



Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8x12
Professional Photographer - கதிர்
☎ : 416-750-8118
2381 EGLINTON AVE.E.
KENNEDY / EGLINTON, SCARBOROUGH

# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

பகுதி:- 10

-*Dr. N. S. Moorthy Ph.D*



கடந்த இதழ்களில் பண்டைத் தமிழர் வாழ்க்கை முறையுடனும், மதச் சடங்குகளுடனும் அக்குபங்சர் சிகிச்சை முறையைப் பார்த்தோம். இனி வரும் இதழ்களில் உடலுறுப்புக்களுடன் பார்ப்போம்.

உடலுறுப்புக்களில் நுரையீரல் பற்றிப் பார்ப்போம். இது சீன மருத்துவ சாத்திரத்தில் உலோகத்துடன் தொடர்புடையதாகக் கூறப்பட்டுள்ளது. அடிப்படை மூலப்பொருட்களில் ஒன்றான உலோகம் உறுதியை வெளிப்படுத்துவதுடன் பெறுமதி மிக்கதும் ஆகும். உலகில் எவ்வித பொருளாதார மாற்றத்தையும் நிர்ணயிக்கும் தங்கம், வெள்ளி போன்றவையும் ஆயுத வாகன, இயந்திர உற்பத்தியில் முன்னிற்கும் மூலப்பொருளான இரும்பு, உருக்கு போன்றவையும் இவற்றுள் அடங்கும். உடலில் உயிர் தங்கியிருப்பதற்கும் உடலின் ஏனைய செயற்பாடுகளுக்கும் அடிப்படையானது சுவாசமாகும். சுவாசம் நின்று விட்டால் உயிரோட்டம் நின்று விட்டதாக அர்த்தம். இன்றைய முதலுதவி **(First Aid)** முறைகளில் முக்கியமாக **A, B, C** என்ற மூன்று எழுத்துக்கள் கூறப்படுகின்றன.

**A) Airway** சுவாசப்பாதை **B) breathing** சுவாசம்
**C) circulation** குருதிச்சுற்றோட்டம்

ஒருவர் விபத்தின் காரணமாகவோ அல்லது வேறு நோய் காரணமாகவோ அறிவிழந்து மயங்கிவிட்டால் அவரது உயிரைப் பாதுகாக்க மேற்கூறிய விடயங்களை அவதானித்து முதலுதவி அளிக்க வேண்டும். இவை மூன்றுமே சுவாத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளாகும். உயிருக்கு ஆதாரமான இம் மூன்றும் தொடர்புபடுகின்றன எனப் பார்க்கையில் ஒருவர் சுவாசிக்கும் போது பிராண வாயுவை **(Oxygen)** உள்ளெடுத்தும் கரியமில வாயுவை **(Carbon dioxide)** வெளியிட்டும் சுவாசம் நடைபெறுகிறது. குருதியில் அமைந்துள்ள உயிர்த்தன்மையைப் பேணுவதற்கு இப் பிராணவாயு தேவைப்படுகின்றது. குருதியில் முக்கிய மூலப்பொருளாகக் காணப்படுவது **Haem** எனப்படும் இரும்புச்சத்தாகும். இதுவே குருதிக்குச் சிவந்த நிறத்தை அளிக்கின்றது. இவ்விரும்புச்சத்தின் தன்மையையொட்டியே ஒருவரது ஆரோக்கியம் நிர்ணயிக்கப்படுகின்றது. இம்முக்கிய தொழிலைச் செய்யும் உறுப்பு சுவாசப்பைகளாகும். மார்பின் உட்புறத்தில் பக்கத்துக்கொன்றாக இவை அமைந்துள்ளன. எவ்வளவு ஆழமாக நாம் மூச்சை உள்ளெடுத்து ஆறுதலாக வெளிவிடுகின்றோமோ அவ்வளவுக்கு எமது ஆயுள் நீடிக்கும். இதையே எமது முன்னோர்கள் பிராணாயாமம் எனக் கூறியுள்ளார்கள். இக்கால மருத்துவர்களும் ஆஸ்த்துமா **(Asthma)** போன்ற நோய்களுக்கு சுவாசப் பயிற்சி **(Breathing Exercise)** சிறந்தது எனக் கூறுகின்றார்கள்.

இதன் முக்கிய உயிர்த்தன்மையை உணர்ந்து தானோ என்னவோ தமிழர்கள் தமது உயிரினும் மேலாகப் பெண்கள் மதிக்கும் உலோகத்தாலான தாலியை இருமார்பகங்களுக்கும் மத்தியில் அணியும் பழக்கத்தைக் கொண்டுள்ளார்கள். ”மார்பின் உள்ளே உயிரைக் காக்கும் உறுப்புக்களும் மார்பின் வெளியே உயிரையொத்த தாலியையும் அணியும் பண்டைத் தமிழர் பண்பாட்டை என்னவென்பது!

அடுத்துவரும் உறுப்பு சிறுநீரகங்கள் **(Kidneys)** ஆகும். உடலின் கழிவுகள் அனைத்தையும் வடிகட்டித் தேவையான கனியுப்புக்களையும், சத்துக்களையும் குருதி மூலம் இழையங்களுக்கு அனுப்பிவிட்டுத் தேவையற்றவற்றை சிறுநீராக வெளியேற்றும் முக்கிய பணியை இவை செய்கின்றன. இன்றைய பல தமிழ்ச் சினிமாக்களில் மனதைத் தொடும் காட்சிகளாகப் பல சிறுநீரக மாற்றுச் சிகிச்சைகள் திணிக்கப்பட்டுள்ளமை இதன் மதிப்பைத் தெரிவிக்கின்றன.

உலகின் முக்கால்வாசிப் பங்கு நீரால் சூழப்பட்டுள்ளது. அதே போன்று மனிதனுடைய உடலிலும் பெரும்பகுதி நீரைக் கொண்டுள்ளது. நீர் இல்லாவிட்டால் உலகின் செயற்பாடு நடைபெற முடியாது. பயிர்கள் வளர முடியாது. உயிரினங்கள் வாழ முடியாது, உலகின் சமநிலை குலைந்து விடும்.

உலகின் முதல் உயிரினங்கள் நீரில் இருந்து தான் தோன்றி உள்ளன என அறிவியல் ஆய்வுகள் சான்று பகர்கின்றன. எனவே தான் தெய்வப் புலவர் திருவள்ளுவரும் 2000 ஆண்டுகளுக்கு முன்பே நீரின் பெருமையையும் அதை வழங்கும் மழையின் சிறப்பையும்

“துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூ உம் மழை” (குறள் - 12 ) என முழங்கிச சென்றார்.

பண்டைத் தமிழர்கள் தாம் உண்ணும் உணவின் முன்பு உணவை வணங்கி நீரைத் தெளித்து அதை தீர்த்தமாக சிறிது அருந்திய பின் உணவுண்ணும் பழக்கத்தை கொண்டுள்ளார்கள். இன்றும் இந் நடைமுறை சிலரிடம் காணப்படுகிறது. சிறுநீரகங்கள் சரியாகத் தொழிப்படாது போனால் உடலில் தேவையற்ற உப்புக்களும் நச்சுப் பொருட்களும் தேங்கி உடலின் பல பகுதிகளும் வீங்கி பின் ஈரல், இருதயம், சுவாசப்பை போன்றவையும் பாதிப்படைய நேரிடலாம்.

தொடரும்.......

## இயேசுவின் அருளுரை

* கிருஸ்துவத் தொண்டர்கள் உப்பைப் போல் பலருக்கும் பயன்பட வேண்டும். தங்கள் வாழ்வில் பிறர்க்கு வழி காட்ட வேண்டும். அவ்வாறு செய்வதால் இறைவன் புகழ் எங்கும் விளங்கும்.
* கிருஸ்துவத் தொண்டர்கட்கு மிகுந்த துன்பங்கள் உண்டு. துன்பத்தைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளுங்கள். வானுலக இன்ப நிலை வந்தமையும்.


NEW Technology
Security and Sound Inc.

Tel: (416) 335-4070



Fax: (416) 335-9936

தமிழர் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கும் எங்கள் ஸ்தாபனத்தின்
மாபெரும் மலிவு விற்பனை

Car Alarm & Installed $99.99

$199.99 Car Alarm and Starter & Installed


PIONEER CD-PLYER ON SALE !!! $199.99

STEREO, SPEAKER, TWEETER, AMPS, SUBWOOFER, FOG LAMPS, SIDE MARKER, PAGER & MUCH MORE

AVITAL
CLIFFORD
Ultra Start
VIPER

✲ We also do any Electrical work.
New Technology Security & Sound Inc.

Pioneer
Audiobahn







Tel: (416) 335-4070
3501 McNicoll Ave., Unit #9, Scarborough, Ont., M1V 2N3



SURA
DJ SERVICES

வண்ணக் கோலம்
திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, அரங்கேற்றம் மற்றும் அனைத்து சமய வைபவங்களுக்கும் அழகிய முறையில் கோலம் செய்து தரப்படும்.



☎: (416) 431-9451

* * * * * *

☎: (416) 565-4869

# விளையாட்டுத் தகவல்கள் (74)

-எஸ். கணேஷ்



**இலங்கை கிரிகெட் அணியின் புதிய சாதனை**

**கிரிகெட் தொடர் செய்திகள்**

சென்ற உலக தமிழோசை இதழில் இலங்கை Vs இங்கிலாந்து தொடரின் முழு விடயத்தையும் பார்த்தோம். இவ் இதழில் நடந்து முடிந்த அவுஸ்திரேலியா Vs இந்தியா, சவுத் ஆபிரிக்கா Vs மேற்குஇந்திய தீவுகள் தொடரைப் பற்றியும் சாஜா கிண்ணத்தைப் பற்றியும் பார்ப்போம்.

**இந்தியா Vs அவுஸ்திரேலியா**

இத் தொடர் மிகவும் முக்கியமானதாகவும் பல புதிய சாதனைகளையும் உருவாகியுள்ளது. முக்கியமாக இந்திய அணி பல புதிய முகங்களை உலகிற்கு அறிமுகம் செய்துள்ளது. அது மட்டுமல்லாமல் லஸ்மன், கபறயன்சிங் ஆகிய இலைமறை காயாக இருந்தவர்களை உலகிற்கு சிறந்த வீரர்களாக காட்டியுள்ளது. 5 (ODI) ஒரு நாள் ஆட்டங்களில் அவுஸ்திரேலியா 3 - 2 என்ற நிலையில் வெற்றி பெற்றாலும் டெஸ்ட் ஆட்டங்களில் அசைக்க முடியாத அணியாக திகழ்ந்த அவுஸ்திரேலியாவை இந்திய அணி மண் கவ்வச் செய்துள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா 10 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. இதனால் அடுத்து வரும் போட்டிகளிலும் அவுஸ்திரேலியாவே வெற்றி பெறும் என்று ரசிகர்கள் நம்பி இருந்த போதும் எல்லாக் கணிப்புக்களையும் பொய்யாக்கி அடுத்த இரண்டு டெஸ்ட் ஆட்டங்களையும் வெற்றி பெற்றுள்ளது. இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இனிங்சால் தோல்வி என்ற நிலையில் இருந்த இந்தியா தப்பிப் பிழைத்து கடைசியில் 171 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இதில் கபறயன்சிங் முதல் இனிங்சில் 8 விக்கெட்டும் இரண்டாவது இனிங்சில் 6 விக்கெட்டுகளையும் லக்ஸமன் 281 ஓட்டங்களையும் பெற்றார்.

**ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களின் விபரம்**

| | | |
|---|---|---|
| 1St ODI:- | இந்தியா 315 (49.5 Over) | |
| | அவுஸ்திரேலியா 255 (43.3) | **இந்தியா 60 ஓட்டங்களால் வெற்றி** |
| 2Nd ODI:- | இந்தியா 248/9 (50 Over) | |
| | அவுஸ்திரேலியா 249/2 (45.1) | **அவுஸ்திரேலியா 8 விக்கெட்டுகளால் வெற்றி** |
| 3 Rd ODI:- | இந்தியா 299/8 (50 Over) | |
| | அவுஸ்திரேலியா 181 (35.5) | **இந்தியா 118 ஓட்டங்களால் வெற்றி** |
| 4 Th ODI:- | இந்தியா 245 (45 Over) | |
| | அவுஸ்திரேலியா 338/4 (50) | **அவுஸ்திரேலியா 93 ஓட்டங்களால் வெற்றி** |
| 5 Th ODI:- | இந்தியா 265/6 (50 Over) | |
| | அவுஸ்திரேலியா 269 /6 (48) | **அவுஸ்திரேலியா 4 விக்கெட்டுகளால் வெற்றி** |

**டெஸ்ட் ஆட்டங்களின் விபரம்**

| | | |
|---|---|---|
| 1 St Test:- | இந்தியா 176, 219, | |
| | அவுஸ்திரேலியா 349,47/0 | **அவுஸ்திரேலியா 10 விக்கெட்டுகளால் வெற்றி** |
| 2 Nd Test:- | இந்தியா 171 (F/0) 657/7 | |
| | அவுஸ்திரேலியா 445, 212 | **இந்தியா 171 ஓட்டங்களால் வெற்றி** |
| 3 Rd Test:- | இந்தியா 501, 155/8 | |
| | அவுஸ்திரேலியா 391, 264 | **இந்தியா 2 விக்கெட்டுகளால் வெற்றி** |

**SOUTH AFRICA Vs WEST INDIES**

(5) டெஸ்ட் ஆட்டங்களிலும் (7) ஒரு நாள் (ODI) ஆட்டங்களிலும் இத் தொடரில் இரு நாடுகளும் மோத இருக்கின்றன. நான்கு டெஸ்ட் ஆட்டங்களும் இப்போது நடந்து முடிந்துள்ளன. இதில் சவுத் ஆபிரிக்க 2 - 0 என்ற ரீதியில் மேற்கு இந்தியதீவுகள் அணியை வெற்றி பெற்றுள்ளது. அடுத்து வரும் வராங்களில் 7 ODI ஆட்டங்களிலும் இரு நாடுகளும் மோத இருக்கின்றன.

டெஸ்ட் ஆட்ட முடிவுகள்

| | | |
|---|---|---|
| 1) மேற்குஇந்திய தீவுகள்:- | 304, 333 / 7 W | ஆட்டம் வெற்றி |
| சவுத் ஆபிரிக்கா:- | 332, 142 / 2 W | தோல்வியின்றி முடிவு |
| 2) சவுத் ஆபிரிக்கா:- | 286, 287 | சவுத்ஆபிரிக்கா 69 |
| மேற்குஇந்திய தீவுகள்:- | 342, 162 | ஓட்டங்களால் வெற்றி |
| 3) சவுத் ஆபிரிக்கா:- | 454, 197 / 9 W | ஆட்டம் வெற்றி |
| மேற்கு இந்திய தீவுகள்:- | 387, 88 / 7 W | தோல்வியின்றி முடிவு. |
| 4) சவுத் ஆபிரிக்கா:- | 247, 215 / 7W | சவுத்ஆபிரிக்கா 82 |
| மேற்கு இந்திய தீவுகள்:- | 140, 240 | ஓட்டங்களால் வெற்றி |

**SHARJAH CUP (சாஜா) - 2001**

புகழ் பெற்ற சாஜா கிண்ண ஆட்டங்களில் இவ் வருடம் பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, நியூசிலாந்து ஆகிய மூன்று அணிக்களும் மோதுகின்றன. சென்ற வருடம் சாஜா கிண்ணத்தை ஸ்ரீலங்கா பெற்றமை யாவரும் அறிந்ததே.

**ஆட்ட விபரம்** APRIL - 8 - பாகிஸ்தான் Vs ஸ்ரீலங்கா, APRIL - 10 - நியூசிலாந்து Vs ஸ்ரீலங்கா, APRIL - 12 - நியூசிலாந்து Vs பாகிஸ்தான், APRIL - 13 - பாகிஸ்தான் Vs ஸ்ரீலங்கா, APRIL- 15 - நியூசிலாந்து Vs பாகிஸ்தான், APRIL - 17 - நியூசிலாந்து Vs ஸ்ரீலங்கா, APRIL 20, 2001 FINAL

1St MATCH:- APRIL - 8 - 2001:- பாகிஸ்தான் 16 ஓட்டங்களால் வெற்றி
பாகிஸ்தான்:- 50 ஓவர், 9 விக்கெட், 255 ஓட்டங்கள். சயித் அன்வர் 90, Iouzaman 44 ஓட்டங்கள்

ஸ்ரீலங்கா:- 48.3 ஓவர்கள், ALL-OUT - 239 ஓட்டங்கள். கலுவுத்திரன 63, சேரம் 38 ஓட்டங்கள்.








YARL WINDOW COVERING
1530 WARDEN AVENUE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்

CUSTOM MADE..
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES



இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்தக் கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377

FREE ESTIMATE


2Nd MATCH : APRIL - 10 - 2001:- ஸ்ரீலங்கா 106 ஓட்டங்களால் வெற்றி
ஸ்ரீலங்கா:- 50 ஓவர், 9 விக்கெட், 269 ஓட்டங்கள். ஜெயவர்த்தனா 116 ஓட்டங்கள். நியூசிலாந்து:- 42.1 ஓவர்கள், ALL-OUT 163 ஓட்டங்கள். முரளிதரன் 3 விக்கெட்டுக்கள் 12 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து கைப்பற்றினார்.

ஜெயசூரியா ஒரு ஓவரில் 30 ஓட்டங்களை எடுத்து (6,6,6,6,4,2) . ஏற்கனவே 1995 ஆம் ஆண்டு ஒரு ஓவர் இல் 27 ஓட்டங்கள் என்ற புதிய சாதனையை முறியடித்துள்ளார். ஒரு நாள் போட்டிகளில் ஒரு ஓவர்களில் அதிகூடிய ஓட்டங்களை (30) எடுத்து புதிய சாதனையை நிலைநாட்டி உள்ளார்.

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

–தொகுப்பு - பரம்


(1943 ஆண்டு படங்களின் தொடர்ச்சி)

"புதுமைப்பெண்" பாரதிராஜா இயக்கிய இப்படத்தை தயாரித்தவர்கள் AVM நிறுவனமாகும். பாண்டியன், ரேவதி இணைந்து நடித்துள்ள இரண்டாவது படம் ஆகும். தமிழக அரசின் வரிவிலக்கைப் பெற்ற இப்படம் 100 நாட்கள் ஓடி வெற்றபெற்றது.

தியாகராஜன்



"தாவணிக் கனவுகள்" எ[illegible]வும் படம் "மூன்று மு[illegible]சு" வெற்றிக்குப் பின்னர் பாக்கியராஜ்ஜின் கைவண்ணத்தில் உருவான ஒரு வெற்றி விழாப்படம் ஆகும். நடிகர் திலகம் சிவாஜியுடன் முதல் முறையாக பாக்கியராஜ் இணைந்து நடித்துள்ள இப்படத்தில் பார்த்தீபன் முதன்முறையாக அறிமுகமாகினார். மேலும் டைரக்டர் பாரதிராஜா இப்படத்தில் ஒரு சினிமா டைரக்டராகவே தோன்றி நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



### இந்தியத் திரைப்படங்களிற்கான தேசிய விருதுகள்

2000ஆம் ஆண்டிற்கான 48 வது திரைப்பட தேசிய விருதுகளின் பட்டியலில் தமிழ்ப் படங்களிற்கு 9 விருதுகள் கிடைத்தன. இது தமிழ் சினிமா உலகத்திற்கு ஒரு பெருமை தரக்கூடிய விடயம் ஆகும். அண்மைக் காலங்களில் தமிழ் சினிமா குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவிற்கு தேசிய விருதுகளைப் பெற்று வருகின்றது. அந்த வரிசையில் 2000ஆம் ஆண்டில் பெற்ற விருதுகளிலிருந்து

பாரதி



"பாரதி" - சிறந்த படம், சிறந்த கலை இயக்கம், சிறந்த ஆடை அலங்காரம்
'[illegible]ல்ப்பூக்கள்' - சிறந்த திரைக்கதை
[illegible]தாரணி - சிறந்த பின்னணிப் பாடகி - 'பாரதி' படம்
'வானத்தைப் போல' - சிறந்த பொழுதுபோக்குப் படம்
'வெற்றிக் கொடி கட்டு' - சமூக சிந்தனையுடனான சிறந்த படம்
சங்கர் மகாதேவன் - சிறந்த பின்னணிப் பாடகர் 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்'
உதயராஜ் - சிறந்த குழந்தை நட்சத்திரம், 'நிலாக் காலம்'



பவதாரணி



# வேலவன் பிலிம்ஸ் ஆதரவில் சினிமாப் போட்டி

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கு **'வேலவன் பிலிம்ஸ்'** ஸ்தாபனத்தாரினால் திரைப்படத்திற்கான நுழைவுச்சீட்டு (**Ticket**) வழங்கப்படும்.

**சினிமா போட்டி # 7**

1. **'பத்ரி"படத்தின் இசையமைப்பாளர் யார்?**
2. **முரளி கதாநாயகனாக அறிமுகமான படம் எது?**
3. **2000 ஆம் ஆண்டின் சிறந்த திரைக் கதைக்கான தேசியவிருது பெற்ற தமிழ்ப் படம் எது?**

***சினிமாப் போட்டி #6 இன் விடைகள்***

1. எஸ். ஏ. ராஜ்குமார்
2. சட்டத்தரணி
3. கே. ராஜன்

**போட்டி #6இல் வெற்றி பெற்றவர்கள்**

1) திருமதி. அபிராமி சிறிகரன் Willowdale



விடைகளை May 15, 2001 இற்கு முன்பாக 'உலக தமிழோசை' இன் முகவரிக்கு அல்லது தொலைநகல்- Fax: (416) 282-4978 இற்கு அனுப்பலாம்.


இப்போது

# மொட்டையிலும் மயிர் புடுங்கலாம்



இங்கு குளிர்தேசமும், வெந்நீர் முழுக்குமே (ஷவர்) கூந்தல் உதிர்வுக்குப் பிரதான காரணமாகிறது. இதைத் தவிர்ப்பதற்கு ஒரு நம்பகமான வழியுண்டு. சபோனாவின் எவமாட்டின் கூந்தல் உதிர்வைத் தடுத்து மீண்டும் வளரச் செய்வதுடன், பொடுகு, இளநரை, செம்படை, முடி அடர்த்தியின்மை போன்ற அனைத்தையும் நிவர்த்தி செய்கிறது. இது முற்றிலும் இயற்கை மூலிகைகளினால் மட்டுமே தயாரிக்கப்படுகிறது.

**SABONA**

*& GIFT*

**(416) 264-8787 (416) 269-8151**

**2602 B Eglinton Ave. East, Scarborough**


**www.tamilclub.com/sabona sabona@home.com**


### யோகாசனம்

* யோகாசனம் என்பது ஓர் ஆன்மீக ஒழுக்கநெறி. இது ஓர் அற்புதமான மனோதத்துவம். மன நிம்மதியுடன் கூடிய மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு ஓர் அடிப்படை.
* உலக நிகழ்ச்சிகளினால் பாதிக்கப்படாத ஓர் உயர்ந்த நிலையை யோகம் செய்வதன் மூலம் மனிதன் பெற முடியும் என்று பகவான் இயம்புகின்றார்.
* மனத்தின் சஞ்சலமற்ற நிலையே "யோகம்" என்கிறார் பகவான்.

# 21ஆம் நூற்றாண்டில் கணனி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?


-ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
Computer Consultant



## பகுதி 26


### CD - கணனி

இந்த இதழில் CD பற்றிய பல விடயங்களை தெரிந்து கொள்ள முயற்சி செய்வோம். Computer கண்டுபிடித்த ஆரம்பத்தில் CD Rom என்பதே அதில இல்லை. Storage device ஆக Floppy drive, floppy disk மட்டுமே பயன்படுத்தப்பட்டது. காலப்போக்கில் கணணியின் Storage அதாவது Copy செய்து சேர்த்து வைக்கக்கூடியது. அல்லது இன்னொரு கணணியில் இந்த copy செய்யப்பட்ட பகுதிகளை அதில் இணைக்கக் கூடிய தேவைக்காக இந்த floppy drive பாவிக்கப்பட்டது. அதனுடைய அளவு (capacity) குறைவான படியினால் Cd Rom என்ற ஒன்றை அறிமுகப்படுத்தினார்கள். CD Rom என்பது (Compact disk read only memory) அதாவது ஞாபகப் பகுதிப பதிவுகளை பதிக்கக் கூடிய ஒன்றாக மட்டுமே அவை ஆரம்பத்தில பயன்படுத்தினார்கள். Compact disk இல் ஒரு முறை பதிவு செய்யப்பட்ட பகுதிகளை மீண்டும் படிக்க மட்டுமே பயன்படும். அதில நீங்கள் எழுத முடியாது. ஆகையால் தான் CD Rom என்று சொன்னார்கள். அப்படி அது வெளியிடப்பட்ட பொழுது மிகவும் வசதியாக இருந்தது. சாதாரண ஒரு floppy disk 1.44 MB அளவு வாய்ந்த பதிவுகள் உள்ளது. ஒரு floppy disk 1.44 MB பதிவு செய்யக் கூடுமானால் ஒரு CD Rom இல் 640 MB ஏறக்குறைய 500 floppy disk இனை ஒரு சிறிய தட்டாகிய **CD** இல் பதிவு செய்யலாம்.



**இப்போது நாம் ஹார்ட்வேருடன் தயாராக இருக்கிறோம். சிடி ரைட்டர் அல்லது ரீரைட்டர் இப்போது நம் சிஸ்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என உறுதியாக நம்பலாம்.**

பெரிய பெரிய Program களை floppy disk மூலம் install செய்யப்பட்ட காலத்தில் எல்லாவற்றையும் ஒரு CD இன் மூலம் install செய்வதற்கு மிக பயனுள்ளதாக இருந்தது இந்த CD Rom. அந்தக் கால கட்டத்தில் பெரிய பெரிய Program க்கான office 97, windows operating system போன்ற பலப்பல program கள் CD இல் மட்டுமே பதிவு செய்து நாம் பயன்படுத்தக் கூடியதாக இருந்தது. அதனால் தான் CD Rom இன் உபயோகம் மிக சாதாரணமாக போய்விட்டது. CD Rom அறிமுகப்படுத்தப்பட்ட CD வருடங்களிலேயே அது இல்லாமல் கணணியில் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டது.




CD Rom இன் அடுத்த படி வளர்ச்சி CD writer. அதாவது உங்கள் கணணியிலே நீங்கள் CD இல் பதிவும் செய்யலாம். முன்பு CD இல் இருந்து படிக்க மட்டுமே முடியுமாக இருந்த CD Rom நீங்களும் பதிவு செய்யக் கூடிய அளவிற்கு வளந்தது. அதற்கு அடுத்த படியாக CD Rewriter அதாவது பதிவு செய்து அழித்து மீண்டும் பதிவு செய்யலாம். மற்றும் DVD போன்ற பல வளர்ச்சியைக் கொண்டு CD Rom இப்பொழுது கணணியில் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது என்பதை மறுக்க முடியாது.

இப்பொழுது CD RW என்பது Compact disk Rewriter என்பதைக் குறிக்கும். இது கணணிக்கு மிக உபயோகமானதாக உள்ளது. அதாவது பெரிய பெரிய அலுவலகத்தில் தினம் தினம் செய்யப்படும் முக்கியமான வேலைளை இதில பதிவு செய்து பாதுகாப்பாக வைப்பதற்காகவும் மறு நாள் அதை அழித்துவிட்டு அன்றைய கணக்கை அன்றைய நிலையில் Computer இல் உள்ள கணக்குகளை மீண்டும் பதிவு செய்து சேமித்து வைப்பதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. அதே போல் நமக்கு வேண்டிய பாடல்களை இதில் பதிவு செய்து நாம் கேட்டுவிட்டு திரும்பவும் வேறு பாடல்களை பதிவு செய்யவும் இந்த CD RW மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த CD Rom இற்கு ஏற்ற CD உம் அதாவது Rewrtiable CD உம் தேவை. இப்படிப் பட்ட CD இல் மட்டும் தான் எதையும் அழித்துப் பதிவு செய்ய முடியும். CD- W என்ற CD இல் ஒரு முறை தான் பதிவு செய்ய முடியும்.

அடுத்த வளர்ச்சி என்று சொன்னால் DVD. DVD என்பது படத்திற்கு மட்டுமே தயாரிக்கப்பட்ட Drive. இந்த DVD drive இல் DVD CD க்களை மட்டுமே பயன்படுத்த முடியும். அப்படியாக CD இல் படங்களைப் பார்க்க முடியாது என்று நினைக்கக் கூடும். சாராதண CD Rom இல் கூட படங்கள் பார்க்க முடியும். அதை VCD (Video CD) என்று சொல்லப்படும்.

*இதில் வரும் ஒருசில சந்தேகங்களையோ அல்லது எந்தத் துறையைப் பற்றி எழுதலாம் என்று நினைக்கிறீர்களோ என்பதைப் பற்றி **'உலக தமிழோசை'** க்கு நீங்கள் அறியத்தரவும்.* vlambaram @email. com

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA
PRINTERS



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4
SCARCOROUGH, ONT.
☎ (416) 410-6401

**உலக தமிழோசை உங்கள் கைகளில் தவழ**

உலக தமிழோசை பத்திரிகையை சந்தா மூலம் பெற்றுக்கொள்வதற்கு அழையுங்கள் -

தொலைபேசி: **416-282-8059**
தொலைநகல்: **416-282-4978**

### தெரிந்து கொள்ளுங்கள்

- உலகில் மிக உயரத்தில் அமைந்துள்ள விமான நிலையம் காஷ்மீரில் உள்ள லடாக் விமான நிலையம். 19,500 அடி உயரம்.
- நியயோர்க்கில் உள்ள ப்ரோட்வே (Broadway) சாலை தான் உலகின் மிக நீண்ட சாலையாகும்.
- மக்கோலின் (Mackolin) என்பவர் தனது எட்டாவது வயதிலேயே உலக சரித்திரத்தை எழுதிப் புகழ் பெற்றவர்.

## அந்நியர்கள்:-பூமியின் சொந்தக்காரர்கள்

தருபவர்:- கனி




செவ்வாய்! சென்னிறக் கிரகம்! ஒரு காலத்தில் கிரேக்கர்களின் கோபத்தின் கடவுள்! நம்மவர்கட்கும் இந்தச் செவ்வாயிற்கும் இடையிலான தொடர்புகள் அதிகம். இவரினால் எத்தனை பெண்கள் திருமணம் செய்யவில்லை, எத்தனை பெண்கள் இளமை கடந்து திருமணத்தைச் செய்தார்கள். எத்தனை இளம் மனைவியரின் கணவனின் மறைவுக்குக் காரணம் சொல்லப்பட்டது, சொல்லப்பட்டவர். இப்படியாக எத்தனையோ பெருமைகளைச் சுமந்து கொண்டிருக்கும் செவ்வாயில் விஞ்ஞானிகளின் பார்வை அதிகமாகத் திரும்பியது. காரணங்கள் பல. அவற்றில் ஒன்று ஒரு வேளை செவ்வாயில் உயிரினங்கள் மனிதனை ஒத்த சீவராசிகள் ஏதும் இருக்கலாமோ என்ற சந்தேகம்.

6 இல் தொலைகாட்டி முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டதில் இருந்து, தொலைக்காட்டிகளின் ஊடாக இந்தச் செவ்வாய் துருவித்துருவி ஆராயப்பட்டது. இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை செவ்வாய் பூமிக்கு மிக அண்மையில் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குச் சஞ்சரிக்கும். இவ் வேளைகளில் செவ்வாய் மிக துணுக்கமாக விஞ்ஞானிகளால் ஆராயப்பட்டது. செவ்வாயில் பல கால்வாய்கள் காணப்படுவதாக ஆரம்பத்தில் விஞ்ஞானிகளால் கூறப்பட்டது. **Perciual Lowell** என்ற விஞ்ஞானியே (இவர்தன் புளூட்டோ கிரகத்தைக் கண்டுபிடிப்பதில் பெரும் பங்கு வகித்தவர்) 1894 ஆம் ஆண்டுகளில் பல வியப்பான செய்திகளைக் கூறினார். பாலைவனமாக வறண்டு காணப்படும் செவ்வாய்க் கிரகத்தில் ஏராளமான கால்வாய்கள் வெட்டப்பட்டுக் காணப்படுகின்றன. நீர்ப்பாசனத்திற்காகத்தான் இவை வெட்டப்பட்டிருக்க வேண்டும். அப்படியாயின் அங்கு உயர் விஞ்ஞான தொழில் நுட்ப அறிவுடைய உயிரினம் இருக்க வேண்டும் என உறுதியாகக் கூறினார்.

நாட்கள் செல்லச் செல்ல எமது தொழில் நுட்ப அறிவு வளர்ச்சியடைய மரீனர், வைகிங் போன்ற விண்கலங்கள் செவ்வாயை அண்மித்து ஆய்வு செய்தன. பல புகைப்படங்களை பூமிக்கு அனுப்பின. அவற்றில் இருந்து தெளிவான பல முடிவுகள் எடுக்கப்பட்டன. செவ்வாயில் எந்தவொரு கால்வாயும் இல்லை. நீர் நிலைகளும் இல்லை. உயிரினங்களும் இல்லை. பூமியில் உள்ளது போன்ற உயிரினங்கள் ஏதும் இருப்பதற்கு சாத்தியமான சுற்றுப்புறச் சூழலை இந்தச் செவ்வாய் கொண்டிருக்கவில்லை. ஆனால் பல படங்கள் செவ்வாயை இட்டு வேறு பல சிந்தனைகளை எமக்கு கொடுக்கத் தொடங்கின. வைகிங் **(Viking)**, மரீனர் **(Mariner)** என்பவை அனுப்பிய சில படங்கள் நம் விஞ்ஞானிகளுக்கு பல வியப்பான செய்திகளைக் கூறின. செவ்வாயின் மேற்பரப்பில் சுமார் பில்லியன் வருடங்களுக்கு முன்னர் வரண்டு போன ...திப்படுக்கைகளைப் படங்கள் காட்டின.


அத்துடன் துருவபபகுதிகளில் இன்றும் பனி உறைந்து காணப்படுகிறது. எனவே சுமார் பில்லியன் வருடங்களின் முன்னர் செவ்வாயில் சலசலத்து ஓடிக் கொண்டு பல நீர் நிலைகள் இருந்திருக்க வேண்டும். ஆயின் பில்லியன் வருடங்களுக்கு முன்னர், இந்த நீர் எல்லாம் வற்றிப் போவதற்கு முன் செவ்வாயில் உயிரினங்கள் ஏன் மனிதன் போன்ற உயிரினம் கூட இருந்திருக்கலாம். மேலும் வைகிங் அனுப்பிய படம் ஒன்று விஞ்ஞானிகளை மேலும் வியப்பில் ஆழ்த்தியது. ஒரு பெரிய மனிதனின் முகத்தை ஒத்த படம் ஒன்றையும் வைகிங் அனுப்பியிருந்தது. மேல்நோக்கி பார்த்த வண்ணம் காணப்பட்ட இந்த மிகப் பெரிய மனித முகம் பல சர்ச்சையை உண்டாக்கியது. சிலர் இது இயற்கையிலேயே கற்பாறைகளில் உண்டாகியிருக்க வேண்டும் என்றனர். வேறு சிலர் இல்லை. இது இயற்கையில் உண்டாகவில்லை. மிக நேர்த்தியாகக் செதுக்கப்பட்டுள்ளது. வெளியில் இருந்து அல்லது அடுத்த அடுத்த கிரகங்களில் உயிரினங்கள், புத்தி ஜீவிகள் இருந்தால் அவர்களைக் கவருவதற்காக, அவர்களுக்கு ஏதோ செய்தியைக் கூறுவதற்காகக் செதுக்கப்பட்டிருக்க வேண்டும் என்கின்றார்கள். இம் முகத்தை மேலும் அண்மித்து ஆய்வுகள் செய்தால் சில வரிவடிவங்களைக் கூட ஒருவேளை காணலாம் என்கிறார்கள்.



அவர்களது கருத்துப்படி பில்லியன் வருடங்களுக்கு முன்னர் செவ்வாய் ஒருவேளை மிகச் செழிப்பான ஒரு கிரகமாக இருந்திருக்க வேண்டும். (இன்று பூமிபோல) மழைவீழ்ச்சி, நீர் நிலைகள், மரம் செடி கொடி உயிரினம் மனிதன் அல்லது மனிதனை ஒத்த உயிரினம் என செழிப்பாக இருந்த கிரகம் கொஞ்சம் கொஞ்சமாக நீரை இழந்து ஒட்சிசனை இழந்து காபனீரொட்சைட்டின் செல்வாக்கைப் பெற்று பாலைநிலமாக, வறண்ட நிலமாக மாறியிருக்க வேண்டும். சூழல் மாற்றத்தின் ஆரம்பக் காலங்களில் அங்கிருந்த மனித இனம் அடுத்த கிரகங்களின் உதவியை எதிர் பார்த்து மிகப் பெரிய மனித முகத்தைச் செதுக்கி இருக்க வேண்டும். உயர் விஞ்ஞான அறிவியல் நிலையே ஒருவேளை செவ்வாயின் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தி இப் பெரும் அழிவைக் கொண்டு வந்திருக்கலாம் எனவும் இவ் விஞ்ஞானிகள் ஐயுறுகின்றார்கள்.


மோட்கேஜ் தேவையா?
Northwood Mortgage Ltd.
5 வருட மோட்கேஜ் வங்கி வீதத்தை விட 1% இற்கு மேலதிகமாக கழிவு தரப்படும்
10 வருட மோட்கேஜ் @ 6.60%
"Specialist in Residential, Commercial, Industrial & Difficult to Place Mortgage
Difficult Situation:
* Self Employed * சொந்தமாக தொழில் செய்பவர்களா?
* Non Income Verifiers * Credit பிரச்சினைகளா?
* Some Credit Issues * 5% முதலீடா?
* 5% Down Payment * வருமானம் உறுதிப்படுத்துவதில் சிக்கலா?
Pl.Call Bus: (416) 969-8130 Cell: (416) 569-2141
Fax: (905) 508-7285



AVIS® RENT A CAR
We try harder.
Great Rates
Quality Service
- Daily, weekly, weekend and monthly rates
- Unlimited km., rates available on cars
- Large selection of vehicles
- Emergency road service
- Major credit cards accepted
We feature GM products
FOR RESERVATIONS & DETAILS CALL: 1-800-879-2847
தமிழில் சேவைக்கு

விக்கி ☎ : (416) 441-1818
1345 Lawrence Ave. E
Scarborough, ont.
அரவிந்தன் ☎ :(416)724-2847
4352 Kingston Rd, Unit 78
Scarborough, Ont
JOHN ☎ (416) 233-2847
5481 Dundas St. W
Etobicoke, Ont.


எங்களது பூமியும் கூட அப்படியான ஒரு பயங்கர நிலையின் ஆரம்பக் கட்டத்தில் உள்ளதாக இன்றைய விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். எனவே அதற்குப் பயந்த செவ்வாய் வாசிகள் காலத்திற்குக் காலம் சிறு சிறு குழுக்களாக செவ்வாயை விட்டு வெளியேறி, விண்கலங்களில் அன்று வெறுமையாக ஆனால் உயிரினம் வாழக் கூடிய சுவாத்தியத்தில் இருந்த பூமியை வந்தடைந்திருக்கலாம். இவர்களது கருத்துப்படி இன்று பூமியில் காணப்படும் மனித இனம் பூமியில் தோன்றவில்லை. மறுதலையாக செவ்வாயில் எவ்வளவோ காலங்களுக்கு முன் தோன்றிய பின் பூமிக்கு வந்து சேர்ந்தவர்கள். இப் பூமியின் சொந்த மைந்தர்கள் இல்லை. வெவ்வேறு காலப் பகுதிகளில் வெவ்வேறு பகுதியில் வந்து இறங்கிய செவ்வாய் வாசிகளே இந்த மனித இனம் என்கிறார்கள். மிகக் கடைசியில் வந்தவர்களே இந்தச் செவ்விந்தியர்கள். எனவே தான் இவர்களது நிறம் இன்னமும் செந்நிறமாகக் காணப்படுகிறது. இன்னமும் பல ஆயிரம் ஆண்டுகள் கழிய இவர்களது நிறம் கூட மாற்றமடையலாம் என்கிறார்கள். மேலும் செவ்வாய் வாசிகளின் அறிவியல் மேம்பாட்டினால் நிகழ்ந்த அனர்த்தனங்கள் எல்லாவற்றையும் நேரில் கண்டு அநுபவிதவர்களாகியபடியால் இவர்கள் இயற்கையுடன் ஒன்றித்து வாழத் தொடங்கிவிட்டார்கள். ஆயினும் தாம் யார், எங்கிருந்து வந்தோம் என்பதைக் காலம் காலமாக நினைவுபடுத்தவே இன்னமும் சைன் வளையிகள், விண்வெளி உடை போன்ற படங்கள், உடுப்புக்கள், நடனங்கள் என்பவற்றை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள் எனக் கூறுகின்றார்கள் இவ் விஞ்ஞானிகள்.

செவ்வாய் பற்றிய புதிரை விடுவிக்க இன்னமும் ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. செவ்வாய் பற்றி நாம் கொண்டிருக்கும் அறிவு, செவ்வியந்தியர்கள், **Siraus** நட்சத்திரத் தொகுதியல் இருந்து தான் தாம் பூமிக்கு வந்தோம் எனக் கூறும் ஆபிரிக்காவின் காட்டுவாசிகள், இவை எல்லாவற்றையும் பார்க்கும் போது மனிதன் பூமியின் அசல் சொந்தக்காரன்தானா என்ற கேள்வி எழுகின்றது. இதனால் தான் என்னவோ மனிதன் குரங்கில் இருந்து தோன்றினார் என்ற கூர்ப்பில் மனிதனுக்கும் குரங்கிற்கும் இடையிலான **Missing Link** என்ற விடுபட்ட இணைப்பை விஞ்ஞானிகள் இன்னமும் காணவில்லையோ? எது எப்படி இருப்பினும் பலப் பல ஆயிரம் ஆண்டுகளாக இப் பூமியிலேயே வாழும் எம்மினம் நாம்தாம். இப் பூமியின் சொந்தக்காரர்கள் என்று கூறுவதைத் தடுப்பவர்கள், எதிர்ப்பவர்கள் யாருமில்லை.



தமிழர் நிர்வாகத்தில்
ஒரு
EMBASSY
விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது
ஆனால
வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள்,(Groceries)
இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)
5 SAMOSA $1.00
Embassy அமைந்துள்ள இடம்: (FINCH / MIDDLEFIELD)
5200 FINCH AVE, SCARBOROUGH
☎ 416-332-8451




FAMOUS PLAYERS
INDIA THEATRE
விஜய்
பூமிகா
மோனல்
NOW PLAYING
COMING SOON
ஸ்ரார்
DIGITAL dts SOUND
Hot: (416) 703-8064
Voice: (416) 289-2154

# “நிரையான கவலைகள் இன்றேல் நரை தோன்றா”

நயினையம்பதி நா.க. சிவராமலிங்கம்

